**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.378/2021**

**Prosecution Witness : 5**

| | | | | |
|---|---|---|---|---|
| **Name** | : பொன்னர் | **Caste** | : | |
| **Father's Name** | : ராமன் | **Calling** | : | மருத்துவர் |
| **Village** | : | **Religion** | : | |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : | **37/2026** |
| | | **Dated** | : | **12.05.2026** |

**12.05.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 7 **திரு.பொன்னர்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா. 5** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர் இல்லை . U/s.355 of petition filed and allowed.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது திண்டுக்கல் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் முதுநிலை உள்உறை மருத்துவராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 02.08.2020ம் தேதி திண்டுக்கல் அரசு தலைமை மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபோது அன்றைய தினம் இரவு 7.10 மணியளவில் குரும்பப்பட்டி மீனாட்சிநாயக்கன்பட்டியை சேர்ந்த சங்கர் என்பவரை அவரது மனைவி ஜோதி என்பவர் சிகிச்சைக்காக அழைத்துவந்திருந்தார். அவரை விசாரித்தபோது அவரை தனக்குத்தெரிந்த இரண்டு நபர்கள் இரும்பு ராடால் அன்றைய தினம் மாலை 5.00 மணியளவில் தலையில் அடித்ததாக கூறினார்.

அவரை பரிசோதித்தபோது அவருக்கு இடது பக்கவாட்டு தலையில் 2x1x1 cm அளவுள்ள சிதைந்த காயம் காணப்பட்டது. அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை வழங்கப்பட்டது. ஆவணங்களின் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கினேன். **காயச்சான்று அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து பதிவேட்டில் 5 மணிக்கு தான் 2 நபர்கள் தாக்கியதாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் சண்டை நடந்தஇடம் காயப்பட்டவரின் வீட்டில் நடந்ததாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி காயம் இருசக்கர வாகனத்தில் சென்று கற்கள் மீது விழுந்தால் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

**மறு விசாரணை**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.05.12 12:12:37 +0530

Judicial Magistrate No.II
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.378/2021**

**Prosecution Witness : 4**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : பார்த்திபன் | **Caste** | : |
| **Father's Name** | : மாரிமுத்து | **Calling** | : மில் வேலை |
| **Village** | : குரும்ப்பப்பட்டி | **Religion** | : |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : 36/2026 |
| | | **Dated** | : 12.05.2026 |

**12.05.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 6 **திரு.பார்த்திபன்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா. 4** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர் இல்லை . U/s.355 of petition filed and allowed.**

**முதல் விசாரணை**

நான் குரும்பப்பட்டியில் குடியிருந்து தற்போது திருப்பூரில் மில் வேலை செய்துவருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது. கடந்த 03.08.2020ம் தேதி மதியம் 12.00 மணியளவில் சங்கர் வீட்டு முன்பு நான் சென்றுகொண்டிருந்தபோது தாடிக்கொம்பு போலிசார் சண்டை சம்பந்தமாக படம் வரைந்து என்னிடம் சாட்சியாக இருக்கும்படி கையொப்பம் பெற்றார்கள். **பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இவ்வழக்கின் குற்ற எண் மற்றும் சட்டப்பிரிவுகள் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். பார்வை மகஜரில் உள்ள விவரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது முன்னிலையில் போலிசார் இரத்தம் பட்ட மண் , இரத்தம் படாத மண் போன்றவற்றை கைப்பற்றவில்லை என்றால் சரிதான். போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் சாட்சி கையொப்பம் இட்டேன் என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C

Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.05.12 12:12:45 +0530

Judicial Magistrate No.II
Dindigul.